// மிக மிக அவசரம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.0095/அ1/2026 நாள். .09.2026**

—

**பொருள் :** பள்ளிக்கல்வி - அலுவலகப் பணியாளர்கள் - 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பதவியில் பணிபுரிபவர்களுக்கு கட்டாய மாறுதல், விருப்ப மாறுதல் பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல், கலந்தாய்வு EMIS இணையதளத்தில் நடத்துவது - அலுவலக பணியாளர்களின் விவரங்களை அடங்கிய பதிவுகள் முழுமையாக இல்லாதது - புதிய பதிவுகளை உள்ளீடு, பதிவுகள் மாற்றம் மற்றும் திருத்தம் செய்வது தொடர்பான அறிவுரைகள் வழங்கியது - பணியாளர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்யும் பணிகள் குறித்து அறிவுரை வழங்குதல் - சார்ந்து.

**பார்வை :**

1. சென்னை -06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின்செயல்முறைகள் ந.க.எண்.030153/அ3/இ1/2026, நாள்.18.09.2026
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.0095/அ1/2026,நாள். .09.2026.
3. சென்னை -06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.030153/அ3/இ1/2026, நாள்.29.09.2026.

-----

பள்ளிக்கல்வித் துறையின்கீழ் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்கள் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே பதவியில் / அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு கட்டாய மாறுதலும், அதனைத் தொடர்ந்து தகுதியுள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில் வருப்ப மாறுதல், மாவட்ட மாறுதல், பதவி யர்வு மற்றும் பணிமாறுதல் ஆகியவை EMIS இணையதளம் வழியாக நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதையும் அலுவலக பணியாளர்களின் ( PA to DEO to Watch Man) விவரங்களை EMIS இணையதளத்தில் ஏராளமான பதிவுகள் விடுபட்டுள்ளதையும், விடுபட்டுள்ள பதிவுகளை 25.09.2026 -க்குள் பதிவேற்றம் செய்து முடிக்கப்பட வேண்டும் பார்வை 1 மற்றும் 2 - இல் காணும் செயல்முறைகளின்படி தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட காலகெடு முடிவுற்ற நிலையில் EMIS இணையதளத்தில் அலுவலகப் பணியாளர்கள் விவரங்களை மீள ஆய்வு செய்ததில், பணியாற்றி வரும் அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கையும், EMIS இணையதளத்தில் உள்ள பதிவுகளுக்கும் ( Physical Count with EMIS Count) விடுதல் பதிவுகள் ஏராளமாக உள்ளது தெரியவருகிறது. சில பதவிகளில் அனுமதிக்கப்பட்ட பணியிடத்தில் பணியாற்றிவருபவர்களின் எண்ணிக்கையை விட கூடுதலாக பதிவுகள் உள்ளதாக தெரியவருகிறது.

உதாரணமாக PA to CEO (HSS and HS ) மற்றும் PA to DEO ஆகிய மூன்று பணியிடங்களும் வெவ்வேறு பணியமைப்பை (Service) கொண்டது. ஆனால் சில மாவட்டங்களில் PA to DEO என்ற பதவியில் 5,6,7 என்ற எண்ணிக்கையில் EMIS பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பதிவிறக்கம் செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது. இதே போல் ஒவ்வொரு பணியிடத்திலும் வித்தியாசம் உள்ளது என பார்வை -3 இல் காணும் செயல்முறைகளின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தங்கள் அலுவலகம்/ பள்ளிகளில் அரசால் அனுமதிக்கப்பட்ட முறையான பணியிடங்களில் பணியாற்றிவரும் அனைத்து அலுவலகப் பணியாளர்களின் (PA to DEO to Watch Man) விவரங்களும் EMIS இணையதளத்தில் கொண்டு வருவது கட்டாயம் என்பதை அலுவலர்கள்/ தலைமை ஆசிரியர்கள் அளவுகோல் பதிவேட்டில் உள்ளவாறு கூர்ந்தாய்வு செய்து விடுபட்டுள்ள அலுவலகப் பணியாளர்களின் விவரங்களை 01.10.2026 -க்குள் EMIS-ல் பதிவேற்றம் செய்து முடித்து இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உரிய விவரங்கள் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு நகலினை 01.10.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் நேரில் ஒப்படைக்க அலுவலர்கள் / தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

1. Post wise EMIS Data List.
2. உரிய படிவம்.

30/9/26

**முதன்மைக் கல்வி அலுவலர்,** ஒ/-

**வேலூர்.**

30/9/26

**பெறுநர் :**

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கனிவுடன் அனுப்பலாகிறது.
2. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலர் ( இடைநிலைக் கல்வி) ( தங்கள் அலுவலகம் மற்றும் அனைத்து அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து உரிய படிவம் பெற்று அனுப்பி வைக்க தெரிவிக்கலாகிறது ).
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்), வேலூர்.
4. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகம், வேலூர்.
5. அனைத்து அரசு நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நகல் :**

கோப்பிற்கு.

பாக